<u>சுருக்கம்</u>

வாகனங்கள் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் – பழைய சீருந்து பதிவு எண்.TN09 G 0562 கழிவு நீக்கம் செய்யப்பட்டது – புதிய சீருந்து வாங்குவதற்கு அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–2) துறை

அரசு ஆணை (ப) எண்.155

நாள்: 30.03.2010
பங்குனி : 16
திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டவை:

1. இந்திய அரசு ஊரக வளர்ச்சி அமைச்சகக் கடிதம் எண்.20015/32/2004 – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாள் 03.01.2005.

2. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர், கடிதம் ந.க.அ 4/198/2008, நாள் 20.10.2009 மற்றும் 11.03.2010.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.76316/09/எஸ்.ஜி.எஸ்.ஒய், நாள் 26.11.2009 மற்றும் 15.03.2010.

* * * * *

<u>ஆணை:</u>

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பயன்பாட்டில் இருந்த சீருந்து எண்.TN09 G 0562 கழிவு நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கு பதில் ஒரு புதிய சீருந்து வாங்குவதற்கு அரசின் அனுமதியைக் கோரியுள்ளார்.

2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு புதிய வாகனங்கள் வாங்குவது குறித்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

அ. ஊரக வளர்ச்சி முகமைகள் புதிய வாகனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவினை, சில்லரைச் செலவுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் இருந்து 30% விழுக்காடு என்ற உச்சவரம்பிற்குள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு மேல் செலவு ஏற்படும் இனங்களில் மாநில அரசே செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆ. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகக் குழு (Governing Body) புதிய வாகனம் வாங்குவதற்குரிய ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(த.பி.பா.)

இ. புதிய வாகனம் வாங்கும் கருத்துருவுடன் பழைய வாகனத்தைக் கழிவு செய்ய அதிகாரமுடைய அலுவலரின் (மாநில மோட்டார் வாகன மற்றும் பராமரிப்புத் துறை இயக்குநர்) சான்றிதழ் (Certificate of condemnation of old Vehicle) அனுப்பப்பட வேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது செயற்குறிப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக நிதியில் 30% சில்லரைச் செலவின கணக்கில் ரூ.10.132 இலட்சம் மீதமுள்ளது என்றும், இந்த நிதியிலிருந்து புதிய சீருந்து ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் உபயோகத்திற்கு கொள்முதல் செய்யப்படும் என்றும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தின் 28.10.2009 நாளிட்ட கூட்டத்தில் மேற்காண் கழிவு நீக்கம் செய்யப்பட்டுள்ள சீருந்திற்குப் பதிலாக புதிய சீருந்து கொள்முதல் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாக கூறியுள்ளார். மேலும் மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரின் 04.02.2008 நாளிட்ட செயல்முறை ஆணையில் வாகன எண்.TN09 G 0562–ஐ கழிவு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, பழைய வாகனத்தை கழிவு நீக்கம் செய்ததற்கும் அதற்கு பதிலாக ஒரு புதிய சீருந்தினை கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வாங்குவதற்கும் ஆணை வழங்கக் கோரியுள்ளார்.

4. இச்செயற்குறிப்பை கவனத்துடன் ஆய்வு செய்த அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையை ஏற்று கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் பயன்பாட்டிற்கு, கழிவு நீக்கம் செய்யப்பட்ட சீருந்திற்குப் பதிலாக அரசாணை (நிலை) எண்.1229, உள் துறை, நாள் 21.12.2006–ல் வெளியிடப்பட்ட ஆணையில் அரசு ஒப்புதல் அளித்துள்ள பட்டியலில் கண்டுள்ள தயாரிப்பில் உள்ள புதிய சீருந்து வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர்.
திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர்.
முதன்மை கணக்காயர், சென்னை – 6 / 18 / 35.

<u>நகல்</u>
நிதித் (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.